Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிறு, அக்டோபர் 27, 2024 | இதழ் 197

# அறிவியல் தொழில்நுட்பம் மட்டும்தான் மாறவேண்டுமா? அரசியலும் மாறவேண்டும். பெரியாரின் கடவுள் மறுப்புக் கொள்கையை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை

சென்னை, 27 அக் 2024: நடிகர் விஜய் ஆரம்பித்துள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு இன்று (அக்டோபர் 27) விக்கிரவாண்டியில் உள்ள வி.சாலையில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் மாலை 4 மணிக்குத் தொடங்கியது.

நடிகர் விஜய், மாநாட்டுக்கு வந்து, திடலில் இருந்த ரசிகர்களைச் சந்தித்தார். அதன்பின், கட்சியின் கொள்கைகளை விளக்கும் ஒரு காணொளி திரையிடப்பட்டது. அதில் கட்சி 'மதச்சார்பற்ற சமூகநீதிக் கொள்கைகள்' கொண்டது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன்பின், விஜய் தனது கட்சியின் கொடியை பட்டன் அழுத்தி ஏற்றினார். இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசியல் களத்தில் ஓர் அரசியல் தலைவராக தவெக மாநாட்டில் தனது கன்னிப் பேச்சை விஜய் தொடங்கினார். அவர் பேசுகையில், "அரசியல் பாம்பு, அதை பயமறியா ஒரு குழந்தையை போலக் கையில் பிடித்து விளையாடுகிறேன்.

அரசியலில் நான் ஒரு குழந்தை என்று மற்றவர்கள் சொல்கிறார்கள். ஆனால் பாம்பைக் கண்டு எனக்கு பயமில்லை. அரசியல் ஒன்றும் சினிமா கிடையாது, போர்க்களம். சீரியஸாக சிரிப்போடு எண்ணங்களை செயல்படுத்துவதுதான் என் வழி. கவனமாகக் களமாட வேண்டும். பாடல் வெளியீட்டு நிகழ்வில் பேசியதிலிருந்து வித்தியாசமான மேடை.

அறிவியல் தொழில்நுட்பம் மட்டும்தான் மாறவேண்டுமா? அரசியலும் மாறவேண்டும். மேடைகளில் உணர்ச்சிக் கொந்தளிப்புடன் பேச வேண்டிய அவசியமில்லை. இப்போது என்ன பிரச்னை அதற்கு என்ன தீர்வு என்பதைச் சொன்னாலே மக்களுக்கு நம்பிக்கை வந்துவிடும், இன்று இருக்கும் தலைமுறையை புரிந்துகொண்டால்தான் சுலபமாக முன்னெடுத்துச் செல்லமுடியும் மற்ற அரசியல்வாதிகளைப் பற்றிப் பேசி நேரம் விரயம் செய்யப்போவதில்லை, ஆனால் கண்ணை மூடிக்கொண்டு இருக்கப் போவதில்லை." என்றார்.




இதனைத் தொடர்ந்து, கட்சியின் கொள்கை வழிகாட்டிகள் பற்றி அவர் பேசினார். "பகுத்தறிவுப் பகலவன் பெரியார் கட்சியின் கொள்கை வழிகாட்டியாக இருப்பார். ஆனால், பெரியாரின் கடவுள் மறுப்புக் கொள்கையை மட்டும் நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த விஷயத்தில் அண்ணாவின் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையை பின்பற்றுவோம். அதாவது, ஒவ்வொரு தனி மனிதரின் அவரவர் விரும்பும் கடவுளை வழிபடலாம். அதில் கட்சி எந்த வகையிலும் தலையிடாது. அதே நேரத்தில், பெரியாரின் பெண் கல்வி, பெண் முன்னேற்றம், சமூகச் சீர்திருத்தம், சமூக நீதி, பகுத்தறிவுச் சிந்தனை ஆகியவற்றின் அடிப்படையில் கட்சி செயல்படும்" என்றார் நடிகர் விஜய்.

காமராஜரின் மதச்சார்பின்மை, நேர்மையான நிர்வாகச் செயல்பாடு மற்றும் அம்பேத்கரின் வகுப்புவாதிப் பிரதிநிதித்துவ கோட்பாட்டை நிலைநிறுத்தவும் சாதிய ஒடுக்குமுறையை எதிர்ப்பதுமே நமது நோக்கம். வீரமங்கை வேலுநாச்சியாரும் தவெகவின் கொள்கை வழிகாட்டியாக திகழ்வார். பெண்களைக் கொள்கைத் தலைவராக ஏற்று வந்த முதல் கட்சி தவெக தான். முன்னேறத் துடிக்கும் சமூகத்தில் பிறந்து முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட அஞ்சலை அம்மாள் நமக்கு வழிகாட்டியாக இருப்பார். சொத்தை இழந்தாலும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர் அஞ்சலை அம்மாள்" என்று விஜய் கூறினார்.

## அர்ஜுன் எரிகேசி செஸ் தரவரிசையில் 2800 புள்ளிகளைக் கடந்ததற்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து

சென்னை, 27 அக் 2024: செஸ் தரவரிசையில் 2800 புள்ளிகளைக் கடந்ததற்காக இந்திய செஸ் கிராண்ட் மாஸ்டர் அர்ஜுன் எரிகேசிக்குப் பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இந்தியர்களைப் பெருமைப்படுத்தியுள்ள அவரது அசாதாரண திறமையையும் விடாமுயற்சியையும் பாராட்டியுள்ள திரு நரேந்திர மோடி, இது மேலும் பல இளைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் என்று கூறியுள்ளார்.

இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

"சதுரங்க மதிப்பீட்டுப் புள்ளிகளில் 2800 புள்ளிகளைக் கடந்த அர்ஜுன் எரிகேசிக்கு வாழ்த்துக்கள்! இது ஒரு தனித்துவமான சாதனை. அவரது தனித்துவமான திறமையும் விடாமுயற்சியும் நமது ஒட்டுமொத்த தேசத்தையும் பெருமைப்படுத்துகிறது. இது தனிப்பட்ட முறையில் அவருக்கு ஒரு பெரிய மைல்கல்லாக இருப்பதோடு, மேலும் பல இளைஞர்கள் செஸ் விளையாட்டில் ஈடுபடவும், உலக அரங்கில் பிரகாசிக்கவும் ஊக்கமளிக்கும். அவரது எதிர்கால முயற்சிகளுக்கு எனது வாழ்த்துகள்".

## வருமானவரிப் பிடித்தம் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கம் சென்னையில் நடைபெற்றது

சென்னை, 27 அக் 2024: சென்னை சரகம்-3 வருமானவரி கூடுதல் ஆணையர் திரு எம் கார்த்திகேயன் வழிகாட்டுதலின் அடிப்படையில், அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர் சங்கத்தில் அமைந்துள்ள கருத்தரங்கக் கூடத்தில், வருமானவரி பிடித்தம் செய்பவர்களின் நலன் கருதி, வருமானவரிப் பிடித்தம் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த வருமானவரி பிடித்தம் குறித்த கருத்தரங்கத்தில் 70-க்கும் மேற்பட்ட பல்வேறு தொழில் செய்யும் வருமானவரி பிடித்தம் செய்பவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

ஏஐஇஎம்ஏ சங்க துணைத் தலைவர் திரு ரவிச்சந்திரன் வரவேற்புரை ஆற்றினார்.

வருமானவரி துணை ஆணையர் திரு ராஜாமனோகர் தலைமை ஏற்று கருத்துரை வழங்கினார்.

அவர் தமது உரையில், வருமானவரி பிடித்தம் செய்பவர்கள், முறையாக வருமான வரிப்பிடித்தம் / வரிவசூல் செய்வதன் அடிப்படை கடமை, வரிப்பிடித்தம் செய்த தொகையினை, காலத்தே மத்திய அரசின் கணக்கில் செலுத்த வேண்டிய கட்டாயம், காலாண்டு படிவங்களை பிழையின்றி காலத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டிய முக்கியத்துவம், வரிப்பிடித்தம் செய்யப்பட்டவர்களுக்கு சான்றிதழ் வழங்க வேண்டிய அவசியம் போன்றவை குறித்து தெளிவாக விளக்கினார்.

வருமானவரி அலுவலர்கள் திரு ராஜாராமன், திரு தீபன் குமார், திரு செந்தில் குமார், வரிப்பிடித்தம் குறித்த தலைப்புகளில் எளிய முறையில் விளக்கினர்.

வருமானவரித் துறையால், வருமானவரி பிடித்தம் செய்பவர்களுக்கு உதவும் பொருட்டு முன்னெடுக்கப்பட்ட பல்வேறு வகையான நடவடிக்கைகள், கருத்தரங்கத்தில் பங்குபெற்றவர்களுக்கு பகிரப்பட்டது.

## தமிழ்நாட்டில் மின்சாரத் துறையில் நடைபெற்று வரும் மின் திட்டங்களின் மேம்பாடுகள் குறித்து மத்திய அமைச்சர் மனோகர் லால் தலைமையில் கலந்தாய்வு கூட்டம்

சென்னை, 27 அக் 2024: தமிழ்நாட்டில் மின்சாரத் துறையில் நடைபெற்று வரும் மின் திட்டங்களின் மேம்பாடுகள் குறித்து மத்திய மின்சாரம், வீட்டு வசதி, நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு மனோகர் லால் தலைமையில் கலந்தாய்வு கூட்டம் இன்று சென்னையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு வி. செந்தில்பாலாஜி மற்றும் துறையின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



தமிழ்நாட்டில் தற்போது பணிகள் நடைபெற்று வரும் அனல் மின் திட்டங்களான 800 மெகா வாட் வடசென்னை அனல் மின் திட்டம் - மிமிமி (மூன்றாம் நிலை), 2ஜீ660 மெகா வாட் உடன்குடி அனல் மின் திட்டம் (முதல் நிலை), 2ஜீ660 மெகா வாட் எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் திட்டம், 600 மெகா வாட் எண்ணூர் விரிவாக்க அனல் மின் திட்டம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் குறித்து விரிவாக அமைச்சர்கள் ஆலோசனை செய்தனர்.

மேம்படுத்தப்பட்ட மின் விநியோகத் திட்டத்தின் கீழ், மின் இழப்பைக் குறைப்பதற்காக 8,932 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இப்பணிகளை விரைந்து முடிப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு மத்திய, மாநில அதிகாரிகளை அமைச்சர்கள் அறிவுறுத்தினர்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், தமிழ்நாடு எரிசக்தித்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பீலா வெங்கடேசன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு க. நந்தகுமார் மற்றும் மத்திய, மாநில அரசுகளின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ஆய்வுக் கூட்டத்திற்குப் பின் செய்தியாளரிடம் பேசிய மத்திய அமைச்சர் திரு மனோகர் லால், கடந்த இரண்டு நாட்களாக அந்தமான் நிக்கோபார் தீவுகள், புதுச்சேரி மற்றும் தமிழ்நாட்டில் ஆய்வு மேற்கொண்டதாக கூறினார். தமிழ்நாட்டில் மின்சாரத் தட்டுப்பாடு எதுவும் இல்லை என்றும் தமிழ்நாடு மின் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். பிரதமரின் சூரிய சக்தி மேற்கூரை திட்டத்தில் பயனாளிகளை அதிகம் இணைக்குமாறும், அதன் மூலம் அவர்களுக்கு இலவச மின்சாரம் கிடைப்பதை உறுதி செய்யுமாறும் மாநில அரசை அவர் கேட்டுக்கொண்டார்.

பாரம்பரிய எரிசக்தியை நம்பியிருப்பதைக் குறைத்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி ஆதாரங்களை அதிகரிக்க மத்திய அரசு பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## இணையதளப் பாதுகாப்புடன் கூடிய இந்தியாவை உருவாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளது: அமித் ஷா




சென்னை, 27 அக் 2024: இன்றைய (27.10.2024) மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி 'டிஜிட்டல் கைது' மூலம் மக்களை ஏமாற்றும் அச்சுறுத்தல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி இருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

"இந்த டிஜிட்டல் கைது மோசடி செய்பவர்கள், காவல்துறை, சிபிஐ, போதைப்பொருள் தடுப்பு அல்லது ரிசர்வ் வங்கி அதிகாரிகள் போல் காட்டிக்கொண்டு வீடியோ அழைப்பில் அச்சுறுத்துவார்கள். இது போன்ற மோசடிகளைத் தடுக்க மக்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை திரு நரேந்திர மோடி எடுத்துரைத்துள்ளார். எந்தவொரு அரசு நிறுவனமும் தொலைபேசி அல்லது வீடியோ அழைப்புகள் மூலம் விசாரணைகளை நடத்துவதில்லை என்பதை மக்களுக்கு அவர் நினைவூட்டினார். இந்த தீமையை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

## நாட்டின் வடகிழக்குப் பகுதி இப்போது நமது தேசிய வளர்ச்சியின் மையமாக உள்ளது: குடியரசுத் துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர்

சென்னை, 27 அக் 2024: நாட்டின் வடகிழக்கு பகுதி தற்போது நமது தேசிய வளர்ச்சியின் மையமாக உள்ளது என்று குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர் கூறியுள்ளார். குவஹாத்தியில் உள்ள கால்நடை அறிவியல் கல்லூரியில் இன்று (27.10.2024) நடைபெற்ற கிருஷ்ணகுரு சர்வதேச ஆன்மிக இளைஞர் சங்கத்தின் 21-வது சர்வதேச மாநாட்டில் அவர் உரையாற்றினார்.

பல ஆண்டுகளாக, வடகிழக்குப் பிராந்தியம் வளர்ச்சி, போக்குவரத்து இணைப்பு தொடர்பான சவால்களை எதிர்கொண்டது என்று அவர் கூறினார். ஆனால் இன்று இந்தப் பகுதி வளர்ச்சியின் முன்னுரிமைப் பகுதியாக மாறியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்,

நமது நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு மூன்று கொள்கைகள் அவசியம் என்று அவர் கூறினார். எந்த சூழ்நிலையிலும், ஆன்மீகத்திலிருந்து உங்களை விலகி இருக்காதீர்கள் என அவர் வலியுறுத்தினார். ஆன்மிகப் பாதை, தேசியவாதம், நவீனத்துவ தொழில்நுட்ப வளர்ச்சி ஆகிய மூன்றும் இணையும் போது உலகின் மிகப் பெரிய சக்தியாக இந்தியா மாறுவதை யாராலும் தடுக்க முடியாது என்று அவர் கூறினார்.

கிருஷ்ணகுருஜியின் போதனைகளின் தாக்கத்தைக் கூறிய குடியரசுத் துணைத் தலைவர், கிருஷ்ணகுருஜி தெய்வீக அருளின் சாரத்தை உள்ளடக்கியவர் என்றும் அன்பு, சேவை, மனிதநேயம் பற்றிய தனது போதனைகளால் தனது பக்தர்களின் இதயங்களை ஒளிரச் செய்துள்ளார் என்றும் கூறினார்.

ஆன்மிகத்தின் உள்ளார்ந்த பண்புகளை எடுத்துரைத்த குடியரசுத் துணைத் தலைவர், நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும் மதிப்புகளை மேம்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் அசாம் ஆளுநர் திரு லக்ஷ்மன் பிரசாத் ஆச்சார்யா, அசாம் முதலமைச்சர் திரு ஹிமந்தா பிஸ்வா சர்மா, மத்திய துறைமுகங்கள், கப்பல் நீர்வழிகள் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால், கிருஷ்ணகுரு சர்வதேச ஆன்மீக இளைஞர் சங்கத்தின் தலைவர் கமலா கோகோய் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349

உள்ளது உள்ளபடி

ஞாயிறு, அக்டோபர் 27, 2024

## ஓசாக் இந்தியா வருடாந்திர கூட்டத்தை அமெரிக்க துணைத் தூதரும் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சரும் தொடங்கி வைத்தனர்




சென்னை, 27 அக் 2024: அமெரிக்க அரசு மற்றும் இந்தியா முழுவதும் உள்ள அமெரிக்க தனியார் நிறுவன பாதுகாப்பு அலுவலர்களுக்கிளிடையே ஒத்துழைப்பை வளர்க்கும் நோக்கில் சென்னையில் அக்டோபர் 24ம் தேதி நடைபெற்ற ஓசாக் இந்தியா வருடாந்திர கூட்டத்தை சென்னையில் உள்ள அமெரிக்க துணைத் தூதர் கிறிஸ் ஹோட்ஜஸ் மற்றும் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் துறை மற்றும் டிஜிட்டல் சேவைகள் அமைச்சர் டாக்டர் பழனிவேல் தியாக ராஜன் தொடங்கி வைத்தனர்.

ஓசாக் என்பது அமெரிக்க வெளியுறவுத் துறையின் உறவுநய பாதுகாப்பு சேவைப் பிரிவு (டி எஸ் எஸ்) மற்றும் வெளிநாட்டில் இயங்கும் அமெரிக்க நிறுவனங்களின் பாதுகாப்பு நிபுணர்களுக்கு இடையிலான அரசு-தனியார் கூட்டாண்மை ஆகும். ஓசாக் உறுப்பினர்கள் பாதுகாப்பு குறித்த தகவல்களை சரியான நேரத்தில் பகிர்ந்து கொள்வதோடு வெளிநாடுகளில் அமெரிக்க உறவுகளைப் பாதுகாப்பதற்கான வலுவான பிணைப்புகளைப் பராமரிக்கிறார்கள்.

பயிற்சிகள், ஆலோசனைகள், நிகழ்ச்சிகள், பாதுகாப்பு எச்சரிக்கைகள் மற்றும் பகுப்பாய்வு ஆகியவற்றில் அமெரிக்க மற்றும் இந்திய தனியார் துறை பங்குதாரர்களுடனான ஒத்துழைப்பை வலுப்படுத்தவதற்கான வாய்ப்பாக இக்கூட்டம் சென்னையிலுள்ள அமெரிக்க துணைத் தூதரகம் மற்றும் இந்தியா முழுவதும் உள்ள தூதரக மற்றும் பெருநிறுவன பாதுகாப்பு அலுவலர்களுக்கு அமைந்தது.

அமெரிக்க துணைத் தூதரகத்தைச் சேர்ந்த உறவுநய பாதுகாப்பு சேவைப் பிரிவு மண்டல அலுவலர் ஸ்காட் ஷானர் கூறுகையில், "பாதுகாப்பு நிபுணர்கள் மற்றும் பங்குதாரர்களாக, சமநிலை முறைமைகளை முன்மாதிரியாகக் கொண்டு இந்திய தனியார் துறையுடன் இணைந்து நம்பிக்கையை உருவாக்க, மற்றும் அச்சுறுத்தல்களை அடையாளம் கண்டு, கண்காணித்து, பாதுகாப்பு சிக்கல்களை முன்கூட்டியே கணிக்க நாங்கள் முயற்சிக்கிறோம்," என்றார்.

நிகழ்ச்சியில் பேசிய தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் பழனிவேல் தியாக ராஜன், "இந்த வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வு சென்னையில் நடைபெறுவது மகிழ்ச்சி அளிக்கிறது. பன்முகத்தன்மை, சமத்துவம், உள்ளடக்கம் மற்றும் அணுகல் (டி ஈ ஐ ஏ) ஆகியவை தமிழ்நாட்டில் சிறப்பாக பராமரிக்கப்படுகின்றன. இவற்றையே ஓசாக்கும் பின்பற்றுவது மகிழ்ச்சி. இன்றைய நிகழ்வு அமெரிக்கா மற்றும் இந்தியா இடையேயான வலுவான வர்த்தக மற்றும் ராஜதந்திர உறவை பிரதிபலிக்கிறது. அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ள இன்றைய காலகட்டத்தில், நாம் நம்மைப் பாதுகாப்பாக வைத்திருக்க தினமும் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும். தனியார்-அரசு கூட்டாண்மைக்கான சிறந்த உதாரணமாக ஓசாக் திகழ்கிறது," என்றார்.

அமெரிக்க தூதரகத்தை சேர்ந்த உறவுநய பாதுகாப்பு சேவைப் பிரிவு மூத்த பிராந்திய அலுவலர் கிறிஸ்டோபர் கில்லிஸ் கூறுகையில், "பாதுகாப்பான செயல்பட்டு சூழலை உறுதி செய்வதற்காக அமெரிக்க அரசு மற்றும் தனியார் துறைக்கு இடையேயான தொடர்பை வலுப்படுத்துவதற்காக இன்றைய மாநாடு விளங்குகிறது," என்றார்.

ஓசாக் இந்தியா சென்னை கிளையின் தனியார் துறை இணைத் தலைவர் ஜான் பால் மாணிக்கம் கூறுகையில், "இந்தியாவில் செயல்படும் அமெரிக்க நிறுவனங்களின் பாதுகாப்பு வல்லுநர்களிடையே சிறந்த நடைமுறைகள் மற்றும் ஒத்துழைப்பை ஓசாக் இந்தியா கிளைகள் மேம்படுத்துகின்றன," என்றார்.

ஓசாக் சென்னை கிளை பற்றி: அமெரிக்க துணைத் தூதரகத்தைச் சேர்ந்த உறவுநய பாதுகாப்பு சேவைப் பிரிவு மண்டல அலுவலர் ஸ்காட் ஷானர் மற்றும் ஜான் பால் மாணிக்கம் தலைமையிலான ஓசாக் இந்தியா சென்னை கிளை இந்தியாவின் பழமையான ஓசாக் கிளைகளில் ஒன்றாகும்.

ஓசாக் இந்தியா பெங்களூரு கிளை பற்றி: அமெரிக்க துணைத் தூதரகத்தைச் சேர்ந்த உறவுநய பாதுகாப்பு சேவைப் பிரிவு மண்டல அலுவலர் ஸ்காட் ஷானர் மற்றும் டெல் டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் பிராந்திய பாதுகாப்பு தலைவரான அனுபவ் மிஸ்ரா தலைமையிலான ஓசாக் பெங்களூரு கிளை இந்தியாவில் அதிக உறுப்பினர்களை கொண்ட கிளைகளில் ஒன்றாகும்.

## சாம்சங் புதிய மருந்து சிகிச்சைகள் கண்காணிப்பு அம்சத்தை இந்தியாவில் சாம்சங் ஹெல்த்துக்காக அறிவித்துள்ளது




கோயம்புத்தூர், 27 அக் 2024: இந்தியாவின் மிகப்பெரும் நுகர்வோர் எலெக்ட்ரானிக்ஸ் பிரான்டான சாம்சங், பயனர்கள் தங்கள் ஆரோக்கியத்தை அதிக முழுமையாக நிர்வகிக்க உதவும் மருந்து சிகிச்சைகள் கண்காணிக்கும் அம்சம்1 ஒன்றை அதன் சாம்சங் ஹெல்த் செயலி2-க்காக அறிமுகப்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த அம்சம் மூலம் பயனர்களால் தங்கள் பரிந்துரைக்கப்பட்ட அல்லது ஓவர்-த-கவுன்டர் மருந்து உட்கொள்ளல் திட்டங்களை கண்காணிக்க முடிவது மட்டுமல்லாமல் முக்கிய மருத்துவ விவரங்கள் மற்றும் உதவிக்குறிப்புகளையும் பெற முடியும். இந்த அம்சமானது ரத்தகொதிப்பு, நீரிழிவு நோய், பி சி ஓ எஸ், பி சி ஓ டி மற்றும் வேறுபல நீண்டகால, நேரம் தவறாத மருந்து விழுங்குகள் தேவைப்படும் நோய்களுக்காக நாட்பட்ட சிகிச்சை முயற்சியில் ஈடுபடும் பயனர்களுக்கு மருந்து உட்கொள்ளல் தவறாமையை கண்காணிக்க உதவும். "சாம்சங் என்பது தன் வாடிக்கையாளர்களை முதன்மையாக வைத்து கருதுகின்ற மற்றும் அவர்களது அன்றாட வாழ்வை செம்மைப்படுத்தும் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் மீது தொடர்ந்து ஆராய்ச்சி நடத்துகின்ற ஒரு பிரான்ட். மக்கள் தங்கள் ஆரோக்கியத்தை கருவிகள் மற்றும் சேவைகளுடன் தொடர்பு கொண்டு சிறப்பாக புரிந்துக்கொண்டு நிர்வகிப்பதற்கு ஒரு முழுமையான ஆரோக்கிய தளத்தை கட்டமைக்கும் நோக்கை நாங்கள் கொண்டுள்ளோம். இந்தியாவுக்காக சாம்சங் ஹெல்த் செயலியில் மருந்து சிகிச்சைகள் அம்சத்தை சேர்த்துள்ளதுடன் பயனர்கள் தங்கள் மருந்து சிகிச்சைகளை மிக அதிக வசதியாக நிர்வகிக்கவும், இணக்கத்தை மேம்படுத்தவும் மற்றும் உச்சக்கட்டமாக சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்," என்று நோய்டா சாம்சங் ஆராய்ச்சி நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் க்யுங்க்யுன் ரூ விளக்கினார்.

இந்த மருந்து உட்கொள்ளல் அம்சமானது சாம்சங்கின் ஆர்&டி, வடிவியல் மற்றும் நுகர்வோர் அனுபவ அணிகளுக்கிடையேயான கூட்டுமுயற்சியின் விளைவு மற்றும் இது இந்திய நுகர்வோர்களின் தேவைகளை மனதில் இருத்தி வடிவமைக்கப்பட்டது. சாம்சங் ஹெல்த் செயலியில் ஒரு மருந்தின் பெயரை உள்ளிட்டவுடன் மருந்து சிகிச்சைகள் அம்சமானது பயனர்களுக்கு பொது விளக்கங்கள் மற்றும் சாத்தியமான பக்க விளைவுகள் போன்ற தீர்க்கமான விவரங்களை வழங்கும்.

கூடுதலாக, இப்புதிய அம்சம், மருந்துகள் ஒன்றோடு ஒன்று புரியும் எதிர் வினைகள் மற்றும் வேறுபல தொடர்புடைய பாதுகாப்பு வழிகாட்டல் பற்றிய விவரங்களையும் வழங்கும். பயனர்கள் எப்போது மருந்துகளை உட்கொள்ள வேண்டும் மற்றும் சாம்சங் ஹெல்த் செயலி மூலம் எப்போது தொய்வில்லாமல் மறுநிரப்பிக்கொள்ள வேண்டும் போன்றவற்றை பற்றி நினைவூட்ட எச்சரிக்கைகளையும் அமைக்கலாம். இந்த எச்சரிக்கைகளை ஒவ்வொரு பயனரின் தேவைக்கேற்ப தனிப்பயனாக்கிக்கொள்ளலாம் மற்றும் அவருக்கு மருந்துகளின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் அவற்றை முன்னுரிமைப்படுத்தி கொள்ளலாம். இதன்படி சாம்சங் ஹெல்த் "மிதமானது" என்பதிலிருந்து "வலுவானது" என்ற வகைகள் வரை எச்சரிக்கைகளை அனுப்பும். கேலக்சி கடிகார பயனர்கள் எச்சரிக்கைகளை தங்கள் கடிகாரத்திலேயும் பெறலாம், எனவே தங்கள் தொலைபேசிகளுக்கு அருகில் இல்லாதபோதும் தங்கள் மருந்து உட்கொள்ளல் அட்டவணையை சிறப்பாக கடைபிடிக்கலாம். இந்த சாம்சங் ஹெல்த் செயலி நித்திரை மேலாண்மை3, முழுமனது நிரல்கள் மற்றும் சீரற்ற இதயதுடிப்பு எச்சரிக்கை4 திறன்கள் போன்ற பல்வேறு மேம்பட்ட ஆரோக்கிய அம்சங்களை தருகிறது. இந்தியாவில் மருந்து உட்கொள்ளல் கண்காணிப்பு அம்சத்தின் அறிமுகம் என்பது சாம்சங் ஆனது தனது பயனர்களுக்கு முழுமையான ஆரோக்கிய அனுபவங்களை உருவாக்கும் அதன் உறுதிப்பாட்டிற்கு மேலும் வலுசேர்க்கிறது மற்றும் அவர்களை அதிக ஆரோக்கியமான, அதிக திருப்தியான வாழ்க்கையை வாழ உதவுகிறது.

மருந்து உட்கொள்ளல் கண்காணிப்பு அம்சம், இந்தியாவில் செயலி புதுப்பிப்புகள் மூலம் சாம்சங் ஹெல்த் செயலியில் கிடைக்க பெறும்.

1சாம்சங் ஹெல்த் மருந்து சிகிச்சைகள் அம்சமானது பயனர்கள் தங்கள் மருந்து உட்கொள்ளலை நிர்வகிக்க உதவும் நோக்கம் கொண்டது. தரப்பட்டுள்ள விவரங்கள் டாடா 1எம் ஜி-இலிருந்து உரிமம் பெற்ற சான்று அடிப்படையிலான உள்ளடக்கமாகும். 2இதற்கு ஆன்ட்ராய்ட் 10.0 அல்லது அதற்கும் பிந்தைய பதிப்புடன் கூடிய ஸ்மார்ட்போன் மற்றும் சாம்சங் ஹெல்த் செயலி பதிப்பு 6.28 அல்லது அதற்கும் பிந்தைய பதிப்பு தேவை. கருவிக்கேற்றவாறு அம்சங்கள் கிடைக்கப்பெறுவது வேறுபடும். 3நித்திரை அம்சங்கள் என்பவை பொது ஆரோக்கியம் மற்றும் உடல்தகுதி நோக்கங்களுக்காக மட்டுமே. அளவீடுகள் உங்களின் குறிப்புகளுக்காக மட்டுமே. அறிவுரைகளுக்கு ஒரு மருத்துவ தொழில்முறையாளரை கலந்தாலோசிக்கவும். 4இந்த ஐ எச் ஆர் என் அம்சம், தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தைகளில் மட்டுமே கிடைக்கும். வேர் ஓ எஸ் பதிப்பு 4.0 அல்லது அதற்கும் பிந்தையதில் கிடைக்கிறது. ஏ எஃப் ஐ பி-ஐ குறிப்புணர்த்தும் சீரற்ற துடிப்பின் ஒவ்வொரு நிகழ்வின் மீதான அறிக்கையை வழங்கும் நோக்கத்தையோ அல்லது அறிக்கையில்லாத நிலை நோயற்ற நிலையை குறிக்கும் நோக்கத்தையோ கொண்டதல்ல. இது மற்ற அறியப்பட்ட சீரற்ற இதய துடிப்பு கொண்டவர்களின் பயன்பாட்டுக்கான நோக்கத்தை கொண்டதல்ல. இந்த அம்சங்கள் சாம்சங் ஹெல்த் கண்காணிப்பு செயலி மூலம் ஆதரவளிக்கப்படுகின்றன. கிடைக்கப்பெறும் தன்மை சந்தை அல்லது கருவியை பொறுத்து வேறுபடும். ஒரு மருத்துவ கருவியாக மென்பொருள் (எஸ் எ எம் டி) என்ற தொழில்நுட்ப ஒப்புதல் / பதிவு பெறுவதன் மீதான சந்தை கட்டுப்பாடுகள் இருப்பதால் தற்போது சேவை கிடைக்கப்பெறும் சந்தைகளில் வாங்கிய கடிகாரங்கள் மற்றும் ஸ்மார்ட்போன்களில் மட்டுமே வேலை செய்யும் (இருந்தும் சேவை- இல்லாத சந்தைகளுக்கு பயனர்கள் பயணித்தால் சேவை மட்டுப்படுத்தப்படலாம்).

இந்த செயலி 22 வயது மற்றும் அதிக வயதுகளில் மட்டுமே பயன்படுத்தப்படலாம்.

## டாடா மோட்டார்ஸ் வர்த்தக வாகன வாடிக்கையாளர்களுக்காக 'வாடிக்கையாளர் பராமரிப்பு மகோத்சவம்' என்ற நாடுதழுவிய ஈடுபடுத்தல் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது




கோயம்புத்தூர், 27 அக் 2024: இந்தியாவின் மிகப்பெரும் வர்த்தக வாகன உற்பத்தியாளரான டாடா மோட்டார்ஸ் ஆனது 24 டிசம்பர் 2024 வரை வர்த்தக வாடிக்கையாளர்களுக்கான அனைத்தையும் உள்ளடக்கிய ஈடுபடுத்தல் திட்டமான வாடிக்கையாளர் பராமரிப்பு மகோத்சவம் 2024-ஐ அறிமுகப்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. இந்த தனித்துவமான மற்றும் விழுமியம்-கூட்டும் திட்டம், நாடுமுழுவதுமுள்ள 2500 அங்கீகரிக்கப்பட்ட சேவை மையங்களில் நடத்தப்படும் மற்றும் சரக்கு வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுனர்களுக்கு ஒருசேர நுண்ணறிவு சார்ந்த உரையாடல்களின் பொருட்டு அவர்கள் சங்கமிக்கும் வாய்ப்பை நல்கும். இந்த மகோத்சவம் மூலம் வாடிக்கையாளர்கள் பயிற்சி பெற்ற டெக்னிஷியன்களால் மேற்கொள்ளப்படும் முழுமையான வாகன பரிசோதனைகள் மற்றும் விழுமியம்-கூட்டப்பட்ட சேவைகளுக்கான அணுகல் உள்ளிட்ட பன்முகப்பட்ட நன்மைகளின் விரவலை பெற்று பயனடையலாம். கூடுதலாக நிறுவனத்தின் சம்பூர்ண சேவா 2.0 முன்முயற்சியின் கீழ் ஓட்டுனர்கள் தனிப்பயனாக்கப்பட்ட நன்மைகளுடன் பாதுகாப்பான மற்றும் எரிபொருள் திறன்சார்ந்த ஓட்டும் வழிமுறைகள் ஆகியவற்றை பற்றிய பரந்த பயிற்சியையும் பெறுவார்கள். வாடிக்கையாளர் பராமரிப்பு மகோத்சவம் 2024 பதிப்பை டாடா மோட்டார்சின் செயல்பாட்டு அதிகாரி திரு கிரிஷ் வாக் அறிமுகப்படுத்தி கூறுகையில், "23 அக்டோபர் ஆண்டு தொடங்கவிருக்கும் வாடிக்கையாளர் பராமரிப்பு மகோத்சவத்தை இந்த ஆண்டு மீண்டும் வழங்குவதை பற்றி நாங்கள் பேருவகை கொண்டுள்ளோம். இன்றைய தினம் எங்களுக்கு விசேஷமான முக்கியத்துவத்தை கொண்டுள்ளது ஏனெனில் இதே தினத்தில்தான் நாங்கள் 1954-ல் எங்களது முதல் வர்த்தக வாகனத்தை விற்பனை செய்தோம் மற்றும் இந்த தினத்தையேதான் நாங்கள் வாடிக்கையாளர் பராமரிப்பு தினமாக அனுஷ்டிக்கிறோம். இந்த மகோத்சவம் ஆனது கவனமான வாகன பரிசோதனைகள் மற்றும் பன்முகப்பட்ட நன்மைகள் ஆகியவற்றின் மூலம் பெஸ்ட்-இன்-கிளாஸ் சேவையை நாங்கள் வழங்குவது தொடர்பான எங்களின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. இந்த மகோத்சவம் மூலம் நாடுமுழுதுமுள்ள ஒவ்வொரு டச்பாயின்டிலுமுள்ள ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் குதூகலத்தை தருவதை உறுதிபடுத்துவதன் மூலம் எங்களது அனைத்து பங்காளர்களுடனுமான எங்கள் உறவை உறுதிபடுத்த இலக்கு கொண்டுள்ளோம். அனைத்து வாடிக்கையாளர்களையும் அவர்களுக்கு அருகிலுள்ள டாடா அங்கீகரிக்கப்பட்ட சேவை மையத்திற்கு வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் மற்றும் இந்த முன்முயற்சியானது அவர்களின் வர்த்தகங்களுக்கு குறிப்பிடத்தக்க விழுமியத்தை சேர்க்கும் என்று நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம்," என்று விளக்கினார்.

டாடா மோட்டார்சின் மிக அகண்ட வர்த்தக வாகனங்களின் தொகுப்பிற்கு நிறுவனத்தின் சம்பூர்ண சேவா 2.0 முன்முயற்சியின் மூலம் கிடைக்கப்பெறும் முழுமையான வாகன வாழ்க்கைசுழற்சி நிர்வாகத்துக்கான விழுமியம்-கூட்டப்பட்ட சேவைகள் மூலம் வலுசேர்க்கப்படுகின்றன. இந்த அனைத்தையும் உள்ளடக்கும் தீர்வானது வாகனம் வாங்கப்படுவதிலிருந்து தொடங்குகிறது மற்றும் வாகனத்தின் வாழ்க்கைசுழற்சி முழுதுமுள்ள ஒவ்வொரு செயல்பாட்டு அம்சத்தையும் ஆதரிக்கிறது, அதாவது பிரேக்டவுன் உதவி, உத்தரவாதமளிக்கப்பட்ட பணி பூர்த்தி அவகாசங்கள், வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தங்கள் (ஏ எம் சி) மற்றும் நியாயமான உதிரி பாகங்களுக்கான வசதிமிக்க அணுகல் ஆகியன உள்ளிட்ட செயல்பாட்டு அம்சங்கள். கூடுதலாக டாடா மோட்டார்ஸ் ஆனது சிறப்பான சரக்கு போக்குவரத்து நிர்வாகத்திற்கான வலைத்தொடர் வாகன தளமான ஃப்ளீட் எட்ஜ்-ஐ திறம்பட பயன்படுத்துகிறது மற்றும் இது உரிமையாளர்கள் தங்கள் வாகனங்களின் தயார்நிலையை அதிகபட்சமாக்கவும் உரிமையாக்கி கொள்ளலின் மொத்த விலையை குறைக்கவும் உதவுகிறது.

## நாகப்பட்டினம் மீனவர்கள் 12 பேர் சிறை இலங்கை கடற்படை அட்டூழியம்

சென்னை, 27 அக் 2024: எல்லை தாண்டி மீன்பிடித்ததாக நாகப்பட்டினத்தை சேர்ந்த 12 மீனவர்களை கைது செய்த இலங்கை கடற்படையினர் ஒரு விசைப்படகை பறிமுதல் செய்தனர்.

தமிழகத்தை சேர்ந்த மீனவர்களுக்கு இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தொல்லை கொடுத்து வருகின்றனர். நடுக்கடலில் மீன்பிடிக்கும்போது அங்கு வரும் இலங்கை கடற்படையினர் மீனவர்களை துன்புறுத்துவதோடு, எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி அவர்களை கைது செய்வதும், படகுகளை பறிமுதல் செய்வதும் தொடர் கதையாக உள்ளது. மேலும் சில சமயங்களில் இலங்கை கடற்படையினர் மீனவர்களை தாக்குவதும், அவர்களின் வலைகளை பறித்து அனுப்புவது, மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடும் நடத்துகின்றனர். மீனவர் பிரச்சனைக்கு மத்திய அரசு தீர்வு காண வேண்டும். தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினரிடம் இருந்து பாதுகாக்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் தொடர்ந்து மத்திய அரசுக்கு கடிதம் எழுதி வருகிறார். ஆனாலும் கூட மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் அடக்குமுறை மட்டும் முடிவுக்கு வரவில்லை.

இந்நிலையில் தான் தற்போது நாகை மாவட்டத்தை சேர்ந்த 12 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

எல்லை தாண்டி மீன்பிடித்தததாக நாகப்பட்டினத்தை சேர்ந்த 12 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். அவர்களின் ஒரு விசைப்படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கைதான மீனவர்களை இலங்கை கடற்படையினர் காங்கேசன் கடற்படை முகாமிற்கு அழைத்து சென்றுள்ளனர். இதனால் மீனவர்களின் குடும்பத்தினர் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# சாம்சங் புதிய மருந்து சிகிச்சைகள் கண்காணிப்பு அம்சத்தை இந்தியாவில் சாம்சங் ஹெல்த்துக்காக அறிவித்துள்ளது

சென்னை, 27 அக் 2024: இணைய சில்லறை விற்பனையாளர்கள், வர்த்தகர்கள் & வணிகர்களின் மன்றம் (ஃபோரம் ஃபார் இன்டர்நெட் ரீடெய்லர்ஸ், செல்லர்ஸ் & டிரேடர்ஸ் - ஃபர்ஸ்ட் இந்தியா) ஆனது அயல்நாட்டு வணிகத்துக்கான இயக்குனரக ஜெனெரல் (டைரெக்ட்டரேட் ஜெனெரல் ஆஃப் ஃபாரின் டிரேட் - டி ஜி எஃப் டி)-ஐ சேர்ந்த முக்கிய அதிகாரிகள் முன்னிலையில் ஒரு முக்கியஸ்தர்கள் வட்டமேஜையை நடத்தியது. இதில் அயல்நாட்டு வணிகத்தில் எம் எஸ் எம் ஈ-க்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களை எதிர்கொள்ள 100 ஏற்றுமதி நிலைமையங்கள் அமைக்கபடுவதன் தேவை வலியுறுத்தப்பட்டது. இந்த விவாதம் ஆனது எல்லை தாண்டிய பணம் செலுத்தல் பிரச்சினைகள், சிக்கலான சுங்கவரி நடைமுறைகள், மற்றும் கட்டுப்பாடுகள் நிறைந்த ஏற்றுமதி கொள்கைகள் போன்ற சிக்கல்களை பற்றி வலியுறுத்தி இவையே மேலதிக உலகமயமாக்கலுக்கு தடைகளாக இருப்பதை சுட்டிக்காட்டியது.

பங்கேற்பாளர்கள் வழிமுறைகளை தொய்வற்றதாக்கி வர்த்தகர்களை அதிக திறனுடன் சர்வதேச சந்தைகளை கடக்க உதவும் வகையில் இ-வணிக ஏற்றுமதி நிலைமையங்கள் (இ-காமர்ஸ் எக்ஸ்போர்ட் ஹப் - ஈ சி ஈ எச்) -ஐ விரைந்து நிறுவுவது இந்திய எம் எஸ் எம் ஈ-க்களின் உலகளாவிய வர்த்தக அபிலாசைகளுக்கு ஆதரவளிக்கும் என்று ஒப்புக்கொண்டனர். இந்த சந்திப்பானது 100 ஏற்றுமதி நிலைமையங்களை அமைப்பது என்ற இலக்கு கொள்வது மற்றும் நாட்டின் அகண்ட இலக்கான 1 ட்ரில்லியன் டாலர் மதிப்பிலான ஒட்டுமொத்த ஏற்றுமதி வர்த்தகம் என்பதற்கு பங்களிக்கும் தேவை ஆகியனவற்றை உறுதியாக ஆமோதித்தது. தற்போது வர்த்தக ஏற்றுமதி வெறும் 4-5 பில்லியன் டாலர் மட்டுமே என்று நிலவுகிறது மற்றும் இது இந்தியாவின் எஃப் ஒய்23-ன் ஒட்டுமொத்த வியாபார ஏற்றுமதிகளுக்கு வெறும் 0.9%-1.1% பங்கை மட்டுமே அளித்தது. இ-வணிக ஏற்றுமதியில் அரசின் 200-300 பில்லியன் டாலர் ஏற்றுமதி என்ற இலக்கை எட்டுவதற்கு நடப்பு ஏற்றுமதி அளவுகளை 50 முதல் 60 மடங்காக பெருக்க வேண்டும் என்பதை பங்கேற்பாளர்கள் வலியுறுத்தினர்.

இந்த சந்திப்பின் போது உரையாற்றிய இணை டி ஜி எஃப் டி திரு மோயின் அஃபேக், "அயல்நாட்டு வணிகத்துக்கான இயக்குனரக ஜெனெரல் (டி ஜி எஃப் டி) ஆனது ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு கூட்டுறவை பேணவும் வெளிப்படையான, அணுகக்கூடிய அமைப்புகளை ஒட்டுமொத்த வர்த்தக சுற்றுசூழலின் நன்மைக்காகவும், திறன் கட்டமைப்பு மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றுக்காக நிறுவுவதற்கும் உறுதிகொண்டுள்ளது. டிரேட் கனெக்ட் போர்ட்டல் மற்றும் எக்சிம் பாத்ஷாலா போன்ற முன்னெடுப்புகள் ஆனவை இந்த குடையின் கீழுள்ள முக்கியஸ்தர்களுக்கு அதிகாரம் மற்றும் கல்வி ஆகியவற்றை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. சரக்கு போக்குவரத்து, சேமிப்பு கிடங்குகள், பேக்கேஜிங் மற்றும் லேபிளிங் போன்ற முக்கிய தலைப்புகளை பற்றிய கல்வியறிவு பொருளடக்கத்தை உருவாக்கி தேசியளவில் செயல்பாட்டை வளர்த்து ஒரு அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்துவதில் எங்களுடன் முன்னனி தொழில்துறை நிறுவனங்கள் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கிறோம். ஒரு செயலூக்க கருத்தரங்கை அமைத்து வழங்கியதற்கு நான் எஸ் எம் ஈ மன்றத்துக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நுண்ணறிவு செறிந்த கருத்துக்கள், குறிப்பாக இ-வணிக ஏற்றுமதிக்காக திறன் கட்டமைப்பு, ஊக்கத்தொகைகள் மற்றும் தொழில்நுட்ப தலையீடுகள் ஆகியவற்றின் மீதானவை, மதிப்பற்றவையாக அமைந்தன மற்றும் எங்கள் எல்லை தாண்டிய இ-வணிக ஆற்றல்களை மேலும் அதிகரித்துக்கொள்ள நாங்கள் இந்த கோட்பாடுகளை ஆராய்வதற்கு தயாராக இருக்கிறோம்," என்று விளக்கினார்.

ஃபர்ஸ்ட் இந்தியா அறங்காவலர் மற்றும் இந்தியா எஸ் எம் ஈ மன்ற கௌரவ தலைவர் திரு வினோத் குமார் கூறுகையில், "எம் எஸ் எம் ஈ-களுக்கு உலக சந்தைகளை அணுகுவதற்கு இ-வணிகம் ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது மற்றும் 2030-க்குள் இந்தியா எல்லைதாண்டிய வர்த்தகத்தில் 200 பில்லியன் யூஎஸ் டாலர் என்ற இலக்கை சுலபமாக எட்ட முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். இருந்தும், தொகை செலுத்தல்கள் மற்றும் சுங்கவரி போன்றவற்றுடன் தொடர்புடைய எங்கள் வளர்ச்சிக்கு தடையாக உள்ள நடப்பு சவால்கள் நம்மால் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. இ-வணிக ஏற்றுமதி நிலைமையங்கள் போன்ற முன்னெடுப்புகளின் வாயிலாக நாங்கள் அரசு மற்றும் கூட்டாளர்கள் ஆகியோருடன் சர்வதேச வர்த்தகத்தில் எம் எஸ் எம் ஈ-கள் தழைத்தோங்க உதவுவதற்காக ஒரு சாதகமான சுற்றுசூழலை உருவாக்கும் நோக்கில் நெருக்கமாக இணைந்து பணியாற்றுகிறோம்," என்று விளக்கினார். இந்த ஆண்டின் துவக்கத்தில் இ-வணிக ஏற்றுமதியை தொய்வற்றதாக்கவும் ஊக்குவிப்பதற்காகவும், குறிப்பாக எம் எஸ் எம் ஈ-களுக்கு, இ-வணிக ஏற்றுமதி நிலைமையங்கள் (ஈ சி ஈ எச்கள்) - ஐ நிறுவப்போவதாக அறிவித்திருந்தது. இந்த முன்னெடுப்பு ஆனது எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளை எளிமைப்படுத்தியும் இணக்க சுமைகளை குறைத்தும் சர்வதேச சந்தைகளில் வளர்ச்சியை உந்துசெலுத்தியும் சவால்களை எதிர்கொள்ள இலக்கு கொண்டுள்ளது. "ஏற்றுமதி நிலைமையங்களாக மாவட்டங்கள்" என்ற முன்னெடுப்பு வாயிலாக அயல்நாட்டு வணிகத்துக்கான இயக்குனரக ஜெனெரல் (டி ஜி எஃப் டி) ஆனது எம் எஸ் எம் ஈ ஏற்றுமதிகளை பெருக்குவதற்காக அமேசான் மற்றும் டி எச் எல் போன்ற தளங்களுடன் இணைந்து கரம் கோர்த்து வருகின்றது. சமீபகால மாதங்களில் டி ஜி எஃப் டி ஆனது 76 மாவட்டங்களிலுள்ள எம் எஸ் எம் ஈ-களுக்கு பயிற்சியளிக்க டி எச் எல்-உடனும் 20 மாவட்டங்களிலுள்ள எம் எஸ் எம் ஈ-களுக்கு ஏற்றுமதி பயிற்சியளிக்க அமேசானுடனும் எம் ஓ யூ-க்களை ஏற்படுத்தியுள்ளது. சரக்கு போக்குவரத்து நிறுவனமான ஷிப்ராக்கெட்டும் 16 மாவட்டங்களில் திறன்-கட்டமைப்பு திட்டத்தை அமைப்பதற்கு டி ஜி எஃப் டி-உடன் எம் ஓ யூ-க்களில் கையொப்பமிட்டுள்ளது. இந்த கூட்டு முயற்சிகள் ஆனவை எம் எஸ் எம் ஈ-கள் ஏற்றுமதி செய்யும் வகையில் அவற்றை தயார்நிலையில் வைத்திருக்க உதவுவதற்காக திறன்-கட்டமைப்பு மற்றும் கருத்தரங்குகள் ஆகியவற்றின் மீது முனைப்பு செலுத்துகின்றன.

**ஏ.எம். ஜெயின் கல்லூரியின் குடிமக்கள் நுகர்வோர் சங்கம் மாதவிடாய் சுகாதாரத்தின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்காக மாதவிடாய் சுகாதார**




**விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. நிகழ்ச்சித் திட்ட அலுவலர் செல்வி கே.சுமித்ராவின் வரவேற்பு மற்றும் தலைமையாசிரியர் டாக்டர் பி.மஹாவீர் அவர்களின் உரையுடன் ஆரம்பமானது, முறையான சுகாதார நடைமுறைகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். சென்னை மாநகராட்சியின் தமிழ்நாடு சேவைத் துறையைச் சேர்ந்த திருமதி சித்ரா மற்றும் திருமதி கீதா ஆகியோர், மாதவிடாய் சுகாதாரம், கட்டுக்கதைகளைத் துடைத்தல் மற்றும் சிறந்த நடைமுறைகளை ஊக்குவித்தல் பற்றிய நுண்ணறிவு அமர்வுகளுக்கு தலைமை வகித்தனர். சுமார் 1,100 சானிட்டரி நாப்கின்கள் விநியோகம் செய்யப்பட்டு, மாணவர்களின் நல்வாழ்வுக்கான அத்தியாவசிய அறிவு மற்றும் வளங்களை மேம்படுத்தி நிகழ்வு நிறைவு பெற்றது.**

# டாடா மோட்டார்ஸ் வர்த்தக வாகன வாடிக்கையாளர்களுக்காக 'வாடிக்கையாளர் பராமரிப்பு மகோத்சவம்' என்ற நாடுதழுவிய ஈடுபடுத்தல் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது

மதுரை, 27 அக் 2024: இந்தியாவின் மிகப்பெரும் வர்த்தக வாகன உற்பத்தியாளரான டாடா மோட்டார்ஸ் ஆனது 24 டிசம்பர் 2024 வரை வர்த்தக வாடிக்கையாளர்களுக்கான அனைத்தையும் உள்ளடக்கிய ஈடுபடுத்தல் திட்டமான வாடிக்கையாளர் பராமரிப்பு மகோத்சவம் 2024 - ஐ அறிமுகப்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. இந்த தனித்துவமான மற்றும் விழுமியம்-கூட்டும் திட்டம், நாடுமுழுவதுமுள்ள 2500 அங்கீகரிக்கப்பட்ட சேவை மையங்களில் நடத்தப்படும் மற்றும் சரக்கு வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுனர்களுக்கு ஒருசேர நுண்ணறிவு சார்ந்த உரையாடல்களின் பொருட்டு அவர்கள் சங்கமிக்கும் வாய்ப்பை நல்கும். இந்த மகோத்சவம் மூலம் வாடிக்கையாளர்கள் பயிற்சி பெற்ற டெக்னிஷியன்களால் மேற்கொள்ளப்படும் முழுமையான வாகன பரிசோதனைகள் மற்றும் விழுமியம்-கூட்டப்பட்ட சேவைகளுக்கான அணுகல் உள்ளிட்ட பன்முகப்பட்ட நன்மைகளின் விரவலை பெற்று பயனடையலாம். கூடுதலாக நிறுவனத்தின் சம்பூர்ண சேவா 2.0 முன்முயற்சியின் கீழ் ஓட்டுனர்கள் தனிப்பயனாக்கப்பட்ட நன்மைகளுடன் பாதுகாப்பான மற்றும்




எரிபொருள் திறன்சார்ந்த ஓட்டும் வழிமுறைகள் ஆகியவற்றை பற்றிய பரந்த பயிற்சியையும் பெறுவார்கள். வாடிக்கையாளர் பராமரிப்பு மகோத்சவம் 2024 பதிப்பை டாடா மோட்டார்சின் செயல்பாட்டு அதிகாரி திரு கிரிஷ் வாக் அறிமுகப்படுத்தி கூறுகையில், "23 அக்டோபர் ஆண்டு தொடங்கவிருக்கும் வாடிக்கையாளர் பராமரிப்பு மகோத்சவத்தை இந்த ஆண்டு மீண்டும் வழங்குவதை பற்றி நாங்கள் பேருவகை கொண்டுள்ளோம். இன்றைய தினம் எங்களுக்கு விசேஷமான முக்கியத்துவத்தை கொண்டுள்ளது ஏனெனில் இதே தினத்தில்தான் நாங்கள் 1954-ல் எங்களது முதல் வர்த்தக வாகனத்தை விற்பனை செய்தோம் மற்றும் இந்த தினத்தையேதான் நாங்கள் வாடிக்கையாளர் பராமரிப்பு தினமாக அனுஷ்டிக்கிறோம். இந்த மகோத்சவம் ஆனது கவனமான வாகன பரிசோதனைகள் மற்றும் பன்முகப்பட்ட நன்மைகள் ஆகியவற்றின் மூலம் பெஸ்ட்-இன்-கிளாஸ் சேவையை நாங்கள் வழங்குவது தொடர்பான எங்களின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. இந்த மகோத்சவம் மூலம் நாடுமுழுதுமுள்ள ஒவ்வொரு டச்பாயின்டிலுமுள்ள ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் குதூகலத்தை தருவதை உறுதிபடுத்துவதன் மூலம் எங்களது அனைத்து பங்காளர்களுடனுமான எங்கள் உறவை உறுதிபடுத்த இலக்கு கொண்டுள்ளோம். அனைத்து வாடிக்கையாளர்களையும் அவர்களுக்கு அருகிலுள்ள டாடா அங்கீகரிக்கப்பட்ட சேவை மையத்திற்கு வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் மற்றும் இந்த முன்முயற்சியானது அவர்களின் வர்த்தகங்களுக்கு குறிப்பிடத்தக்க விழுமியத்தை சேர்க்கும் என்று நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம்," என்று விளக்கினார்.

டாடா மோட்டார்சின் மிக அகண்ட வர்த்தக வாகனங்களின் தொகுப்பிற்கு நிறுவனத்தின் சம்பூர்ண சேவா 2.0 முன்முயற்சியின் மூலம் கிடைக்கப்பெறும் முழுமையான வாகன வாழ்க்கைசுழற்சி நிர்வாகத்துக்கான விழுமியம்-கூட்டப்பட்ட சேவைகள் மூலம் வலுசேர்க்கப்படுகின்றன. இந்த அனைத்தையும் உள்ளடக்கும் தீர்வானது வாகனம் வாங்கப்படுவதிலிருந்து தொடங்குகிறது மற்றும் வாகனத்தின் வாழ்க்கைசுழற்சி முழுதுமுள்ள ஒவ்வொரு செயல்பாட்டு அம்சத்தையும் ஆதரிக்கிறது, அதாவது பிரேக்டவுன் உதவி, உத்தரவாதமளிக்கப்பட்ட பணி பூர்த்தி அவகாசங்கள், வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தங்கள் (ஏ எம் சி) மற்றும் நியாயமான உதிரி பாகங்களுக்கான வசதிமிக்க அணுகல் ஆகியன உள்ளிட்ட செயல்பாட்டு அம்சங்கள். கூடுதலாக டாடா மோட்டார்ஸ் ஆனது சிறப்பான சரக்கு போக்குவரத்து நிர்வாகத்திற்கான வலைத்தொடர் வாகன தளமான ஃப்ளீட் எட்ஜ்-ஐ திறம்பட பயன்படுத்துகிறது மற்றும் இது உரிமையாளர்கள் தங்கள் வாகனங்களின் தயார்நிலையை அதிகபட்சமாக்கவும் உரிமையாக்கி கொள்ளலின் மொத்த விலையை குறைக்கவும் உதவுகிறது.

# சன்ஃபீஸ்ட் பானங்களை வழங்க பீட்சா ஹட் மெனுவில் வழங்க கூட்டாண்மையில் இணையும் ஐடிசி மற்றும் பீட்சா ஹட்

சென்னை, 27 அக் 2024: இந்நாட்டின் உணவு தொழில்துறையில் பெருநிறுவனங்கள் என புகழ் பெற்றிருக்கும் ஐடிசி மற்றும் பீட்சாஹட், முதன் முறையாக ஒரு கூட்டாண்மையில் இணைந்திருக்கின்றன. இதன் காரணமாக, மிக அதிகமாக விற்பனையாகும் சன்ஃபீஸ்ட் பானங்களான டார்க் ஃபேண்டஸி மில்க்ஷேக் மற்றும் மேங்கோ ஸ்மூத்தி ஆகியவை பீட்சாஹட் - ன் மெனுவில் இனி இடம்பெறும். தரம் மற்றும் புத்தாக்கத்தின் மீது இரு நிறுவனங்களும் சிறப்பு கவனம் செலுத்துகின்ற நிலையில், மாறிவரும் நுகர்வோர் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு மேம்படுத்தப்பட்ட அனுபவத்தை வழங்குவதே இக்கூட்டாண்மையின் நோக்கமாகும். பண்டிகை சீசனையொட்டி மக்களால் அதிகம் விரும்பப்படும் சன்ஃபீஸ்ட் பானங்களின் அறிமுகம், பீட்சாஹட் - ன் அறிவார்ந்த நுகர்வோர்களது கொண்டாட்டத்திற்கு மேலும் சுவை சேர்க்கும். தீபாவளி பண்டிகையை கொண்டாடுகின்ற தருணமோ அல்லது இன்னும் வரவிருக்கின்ற பிற திருவிழாக்களோ எதுவாக இருப்பினும், கொண்டாட்ட விருந்துகளுக்கு மிகப் பொருத்தமான ஜோடியாக சன்ஃபீஸ்ட் - ன் இந்த இரு பானங்களும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. சாக்லேட்டைப் பெரிதும் விரும்புவர்களுக்கு டார்க் ஃபேண்டஸி மில்க்ஷேக்




மிகச்சிறப்பான தேர்வாக இருக்கும். சன்ஃபீஸ்ட் டார்க் ஃபேண்டஸியின் முத்திரைபதித்த சுவையுடன் பெல்ஜியம் சாக்லேட்டை வெல்வெட் போன்ற மில்க்ஷேக் செறிவுடன் இது ஒருங்கிணைக்கிறது. பழுத்த மாம்பழங்களின் இனிமையை உள்ளடக்கிய மேங்கோ ஸ்மூத்தி, பழம் மற்றும் க்ரீம் ஆகிய இரண்டின் ஆனந்தமளிக்கும் கலவையாக உருவாக்கப்பட்டிருப்பதால், புத்துணர்ச்சியூட்டும் பானத்தை விரும்பி தேடுபவர்களுக்கு சிறப்பான பானமாக இருக்கும். குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரும், குறிப்பாக குழந்தைகள் மற்றும் இளவயது நபர்கள் உட்பட, அனைத்து வயது பிரிவைச் சேர்ந்தவர்களின் மாறுபட்ட சுவை விருப்பங்களை ஒருங்கிணைந்து பூர்த்திசெய்ய இந்த இரு பிராண்டுகளுக்கும் பீட்சாஹட் - ன் மெனுவில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள இந்த பானங்கள் உதவும்.

பீட்சா ஹட் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு. ரோஹன் பெவேகர் கூறியதாவது: "ஐடிசி உடனான இக்கூட்டாண்மை வழியாக நாங்கள் வழங்கும் உணவுகளின் அணிவரிசையை விரிவாக்குவதில் நாங்கள் உற்சாகமடைகிறோம். இந்த இரு பானங்களும் எமது மெனுவிற்கு மிக நேர்த்தியாக பலம் சேர்க்கின்றன. பணி நேரத்திற்குப் பிறகு சகப் பணியாளர்களுடன் ரிலாக்ஸ் செய்யும்போதோ அல்லது குடும்பத்தினர் மற்றும் குழந்தைகளோடு ருசியான உணவை அருந்தி அனுபவிக்கும்போதோ அல்லது நண்பர்கள், தோழிகளுடன் சிறப்பான தருணங்களை கொண்டாடும்போதோ எதுவாக இருப்பினும், எமது வாடிக்கையாளர்கள் அனுபவித்து மகிழ்கின்ற தருணங்களை இவை உருவாக்கும். இந்த பண்டிகை காலத்தின்போது இந்த பானங்களை அறிமுகம் செய்வது, பகிரப்படும் இத்தகைய இனிய அனுபவங்களை இன்னும் கூடுதல் சிறப்பானதாக ஆக்குகிறது."

ஐடிசி ஃபுட்ஸ் நிறுவனத்தின் துணை தலைவர் & டெய்ரி மற்றும் பிவரேஜஸ் பிரிவின் தலைவருமான திரு, விவேக் கூக்கல் இக்கூட்டாண்மை குறித்து கூறியதாவது: "எமது அனைத்து முன்னெடுப்பு திட்டங்களின் மையமாக இருப்பவை நுகர்வோரின் விருப்பங்களே. எனவே, தனித்துவமான நுகர்வோர் அனுபவங்களை சாத்தியமாக்குவது எமது தொடர் முயற்சியாக இருந்து வருகிறது. இக்கூட்டாண்மையின் மூலம் சிறப்பான பீட்சாஹட் உணவுப்பொருட்களோடு மிக நேர்த்தியாகப் பொருந்துகின்ற மற்றும் மக்களால் பெரிதும் நேசிக்கப்படுகின்ற எமது இரு பானங்களை வழங்குவதில் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம். மேலும், நுகர்வோர்களுக்கு நிகரற்ற அனுபவத்தை வழங்க இரு முன்னணி உணவு பிராண்டுகளுக்கிடையே கூட்டிணைவின் மூலம் ஏற்படும் சிறப்பான ஆற்றலை பிரதிபலிப்பதாக இந்த ஒத்துழைப்பு நடவடிக்கை அமைகிறது,"

2024 அக்டோபர் முதல் இந்தியாவெங்கிலும் உள்ள அனைத்து பீட்சாஹட் அவுட்லெட்களிலும் இந்த சன்ஃபீஸ்ட் பானங்கள் கிடைக்கும்.

## உலகளாவிய முதலீட்டாளர் கூட்டாண்மைகளை வலுப்படுத்த 400 மில்லியன் அமெரிக்க டாலர்களை வெளிநாட்டு வணிகக் கடன்களாக திரட்டியுள்ளது முத்தூட் ஃபைனான்ஸ்

சென்னை, 27 அக் 2024: இந்தியாவின் மிகப்பெரிய தங்கக் கடன் நிறுவனமான முத்தூட் ஃபைனான்ஸ் லிமிடெட் ஆனது இந்திய ரிசர்வ் வங்கியின் வெளிப்புற வணிகக் கடன்கள் (ஈ சி பி) வழிகாட்டுதலின் படி, உலகளாவிய நடுத்தர காலக் குறிப்புத் திட்டத்தின் கீழ் 2 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மூத்த பாதுகாப்பான நோட்டுகளை (குறிப்புகள்) வெளியிடுவதன் மூலம் 400 மில்லியன் அமெரிக்க டாலர்களை (தோராயமாக ரூ.3350 கோடி) திரட்டியுள்ளதாக அறிவித்துள்ளது.

குறிப்புகளுக்கான கூப்பன் 6.375% ஜீ.ணீ என அமைக்கப்பட்டுள்ளது மற்றும் 4.5 ஆண்டுகள் மற்றும் சராசரியாக 4 ஆண்டுகள் முதிர்ச்சியுடன் டோர்டு டோர் மெச்சூரிட்டி வழங்கப்படும்.

உலகெங்கிலும் உள்ள 125+ முதலீட்டாளர்களின் 3.9எக்ஸ் கூடுதல் சந்தா மற்றும் இறுதிப் பங்கேற்புடன் ஆர்டர் புத்தகம் 1.3 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியது. பத்திரங்கள் சர்வதேச கிரெடிட் ரேட்டிங் ஏஜென்சிகளான எஸ்&பி மற்றும் ஃபிட்ச் ஆகியவற்றால் பிபி/நிலையான மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்டன. 1933 ஆம் ஆண்டின் அமெரிக்கப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 144ஏ விதிக்கு இணங்க இந்த செயல்பாடானது இருந்தது.

இந்திய ரிசர்வ் வங்கியின் வெளிநாட்டு வணிகக் கடன் வழிகாட்டுதல்களின் படி, அனுமதிக்கப்படும் கடன் மற்றும் பிற நடவடிக்கைகளுக்கு திரட்டப்படும் நிதி ஆனது பயன்படுத்தப்படும்.

குறிப்புகள் ஆனது என் எஸ் ஈ 9, கிஃப்ட் சிட்டி, குஜராத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன.

டாய்ச் வங்கி மற்றும் ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கி ஆகியவை வழங்குவதற்கான ஏற்பாட்டாளர்கள் மற்றும் டீலர்கள் ஆகும்.

முத்தூட் ஃபைனான்ஸ் ஆனது 2019 இல் யூஎஸ்டி 450 மில்லியன் மற்றும் 2020 இல் யூஎஸ்டி 550 மில்லியன் திரட்டியது. இது முறையே 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் அந்தந்த தேதிகளில் திருப்பிச் செலுத்தப்பட்டது. நடப்பு நிதியாண்டில், நிறுவனம் ஏற்கனவே 7.125% கூப்பனில் 3.75 ஆண்டுகளுக்கு அதே வழியில் 750 மில்லியன் அமெரிக்க டாலர்களை திரட்டியுள்ளது.

நிதி திரட்டல் குறித்து பேசிய முத்தூட் ஃபைனான்ஸ் லிமிடெட் நிர்வாக இயக்குனர் திரு. ஜார்ஜ் அலெக்சாண்டர் முத்தூட், “2 பில்லியன் அமெரிக்க டாலர் உலகளாவிய நடுத்தர காலக் குறிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 400 மில்லியன் அமெரிக்க டாலர்களின் இந்த நிதி திரட்டல் மேற்கொள்ளப்பட்டது. இது, உலகளாவிய முதலீட்டாளர்களுடனான எங்கள் கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்தும். எங்களின் உறுதியான செயல்திறன், எங்கள் வாடிக்கையாளர்களுக்கான அர்ப்பணிப்பு மற்றும் இந்தியாவில் தங்கக் கடன் வணிகத்தின் வெற்றிகரமான சாதனை ஆகியவற்றின் பின்னணியில் உலகளாவிய முதலீட்டாளர்களிடமிருந்து பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளோம். முந்தைய இதழின் கூப்பன் வீதத்தை 7.125% என்பதை, கூப்பன் விகிதத்தில் 6.375% ஆகக் குறைப்பதற்கு இது எங்களுக்கு உதவியது. இருப்பினும் முந்தைய இதழின் 3.75 ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது காலம் 4.5 ஆண்டுகளாக அதிகரித்துள்ளது. இந்த பிரச்சினை நிறுவனம் அதிக கடன் வழங்கல்களை அடையவும், கடன் வாங்குவதற்கான ஆதாரங்களை மேலும் பல்வகைப்படுத்தவும் மற்றும் முதலீட்டாளர் தளத்தை விரிவுபடுத்தவும் உதவும்."

## “ஹோண்டா மோட்டார் சைக்கிள் அண்ட் ஸ்கூட்டர் இந்தியா நிறுவனம், சாலைகளை பாதுகாப்பானதாக மாற்றுவதற்கு தமிழ்நாட்டின் காஞ்சிபுரத்தில் ஒரு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரத்தை நடத்துகிறது“

சென்னை, 27 அக் 2024: நாடு முழுவதும் சாலைப் பாதுகாப்பை ஊக்குவிக்கும் ஒரு தொடர்ச்சியான முயற்சியில், ஹோண்டா மோட்டார்சைக்கிள் அண்ட் ஸ்கூட்டர் இந்தியா (எச் எம் எஸ் ஐ) நிறுவனம் சமீபத்தில் தமிழகத்தின் காஞ்சிபுரத்தில் ஒரு பயனுள்ள சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரத்தை நடத்தியது. இளைஞர்களிடையே பொறுப்பான சாலை நடத்தையை வளர்ப்பதற்கான எச் எம் எஸ் ஐ இன் பணியை வலுப்படுத்துகின்ற வகையில், இந்த பிரச்சாரம் கேந்திரிய வித்யாலயாவைச் சேர்ந்த 2,400 மாணவர்கள் மற்றும் பணியாளர்களை சென்றடைந்தது.

எதிர்காலத்தை வடிவமைப்பதில் இளம் மனதின் முக்கியப் பங்கைப் புரிந்துகொண்ட எச் எம் எஸ் ஐ நிறுவனம், குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடையே சாலைப் பாதுகாப்பு நடைமுறைகளை புகுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளது. ஊடாடும் மற்றும் ஈடுபாட்டுடன் கூடிய திட்டங்கள் மூலம், இந்த நிறுவனம் சாலை விபத்துகளை கணிசமாகக் குறைத்து, பொறுப்பான சாலைப் பயன்பாட்டை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களில், ஒரு பரந்த பார்வையாளர்களை சென்றடைவதற்காக தொடர்ந்து இந்த பிரச்சாரங்கள் நடத்தப்படுகின்றன.

இந்த காஞ்சிபுரம் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரத்தில் சாலை பாதுகாப்பு கல்வியை விரிவானதாகவும் ஊடாடக்கூடியதாகவும் மாற்றும் நோக்கத்தில் பல்வேறு நடவடிக்கைகள் இடம்பெற்றன. பங்கேற்பாளர்கள் கோட்பாட்டு பாதுகாப்பு சவாரி பாடங்கள், ஆபத்து முன்கணிப்பு பயிற்சி, சாலை பாதுகாப்பு வினாடி வினாக்கள், ஹெல்மெட் பற்றிய விழிப்புணர்வு அமர்வுகள் மற்றும் நடைமுறை ரைடிங் பயிற்சியாளர் பயிற்சிகள் ஆகியவற்றில் பங்கேற்றனர். ஒவ்வொரு செயல்பாடும் சாலைப் பாதுகாப்புக் கல்வியை, கற்றுக்கொண்ட பாடங்கள் ஒரு நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை உறுதி செய்கின்ற வகையில், தகவலறிந்ததாகவும் ஈடுபாடுடையதாகவும் ஆக்குவதற்கு வடிவமைக்கப்பட்டது.

இந்த முயற்சியை வெற்றியடையச் செய்வதற்கு கேந்திரிய வித்யாலயா அளித்த ஆதரவை எச் எம் எஸ் ஐ பாராட்டுகிறது. பாதுகாப்பான சாலைகளை உருவாக்குகின்றதில் மற்றும் போக்குவரத்து விபத்துகளைக் குறைகின்றதில் இந்த பகிரப்பட்ட அர்ப்பணிப்பை இந்த ஒத்துழைப்பு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

தொடக்கத்தில் இருந்து, எச் எம் எஸ் ஐ ஆனது, தமிழ்நாடு மாநிலத்தில் பொறுப்பான சாலைப் பயன்பாட்டை ஊக்குவிப்பதிலும், பாதுகாப்பான சவாரி பழக்கத்தை வளர்ப்பதிலும் கவனம் செலுத்தி, கிட்டத்தட்ட 2.5 இலட்சம் பெரியவர்கள் மற்றும் குழந்தைகளுக்குக் கற்பித்துள்ளது. காஞ்சிபுரத்தில் நடைபெறும் இந்த பிரச்சாரம், இந்தியாவின் சாலைகளை அனைவருக்கும் பாதுகாப்பானதாக மாற்றுவதற்கான எச் எம் எஸ் ஐ இன் தொடர்ச்சியான முயற்சிகளுக்கு மற்றொரு மைல்கல்லை சேர்க்கிறது.

## பாதுகாப்பான நிதிநிலை சொத்து மதிப்பு வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது; என் ஐ எம் 9.2% எனும் ஆரோக்கியமான நிலையில் உள்ளது சொத்து தரம் நிலையாக உள்ளது - ஜி என் பி ஏ /என் என் பி ஏ 2.5%/0.6% நீடிக்கிறது

சென்னை, 27 அக் 2024: உஜ்ஜீவன் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கியின் மேலாண்மை இயக்குனரும் தலைமைச் செயல் அலுவலருமான திரு. சஞ்சீவ் நௌடியல் அவர்கள், “உஜ்ஜீவன் எப்போதும் வலுவாக நின்று வெற்றிகரமாக தொழில்துறையில் நீடிக்கிறது. அதேபோன்று, எங்களின் நெகிழ்ச்சியான வணிக மாதிரியும், களசட சூழலைப் பற்றிய நல்ல புரிதலும், இதுபோன்ற சிக்கல்களைக் கண்டறிந்து, நம்பிக்கையுடன் நிர்வகிப்பதற்கு எப்போதும் எங்களை தயாராக வைத்திருக்கிறது. எங்களுடைய முந்தைய தொடர்புகளில் குறிப்பிட்டது போல, உயர்ந்த கடன் அளவுகள் காரணமாக நாங்கள் நாடு முழுவதும் அழுத்தத்தை வெளிப்படுத்தியுள்ளோம். எனவே, நுண்கடன் இடத்தின் வளர்ச்சியின் அடிப்படையில் எச்சரிக்கையான அணுகுமுறையை முன்னெச்சரிக்கையுடன் உருவாக்கி, சொத்துத் தரத்தை நிர்வகிப்பதற்கு எங்களின் விழிப்புணர்வை பலப்படுத்தியுள்ளோம்.

உஜ்ஜீவன் தனது சலுகைகளில் அதிக பாதுகாப்பான தயாரிப்புகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் அதன் போர்ட்ஃபோலியோவ ஆபத்தை குறைக்க தொடர்ந்து உத்திகளை வகுத்துள்ளது. கடந்த 18 மாதங்களில் வங்கி மைக்ரோ அடமானங்கள், தங்கக் கடன், வாகனக் கடன், வேளாண்மை மற்றும் பணி மூலதன (எஸ் எம் ஈ) கடன்கள் போன்ற தயாரிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது, மேலும் அவை ஒவ்வொரு மாதமும் ஒட்டுமொத்த சொத்துப் புத்தகத்தில் அதிகளவில் பங்களித்து வருகின்றன. இது பாதுகாப்பான சொத்து போர்ட்ஃபோலியோவில் எங்களின் விரைவான வளர்ச்சியையும், தொடர்ச்சியாக 12% வளர்ச்சியையும் பிரதிபலிக்கிறது. தற்போது எங்களது பாதுகாக்கப்பட்ட புத்தக பங்களிப்பு செப்'24ல் 34.9% ஆகவும், ஜூன்'24ல் 31.3% ஆகவும் உள்ளது. மொத்த சொத்துப் புத்தகம் செப்டம்பர் 24ல் 14% ஆண்டு/1% கியூஓகியூ உயர்ந்து ரூ. 30,344 கோடியாக இருந்தது. சி டி விகிதம் 89% ஆக உள்ளது, ஆரோக்கியமான மொத்த வைப்பு வளர்ச்சி 17% ஆண்டு/5% கியூஓகியூ இல் ரூ. 34,070 கோடியாக உள்ளது. தீர்வு அடிப்படையிலான தயாரிப்புகளின் அறிமுகம் மற்றும் பெருகிய முறையில் தயாரிப்புத் தொகுப்பை மேம்படுத்துதல் மற்றும் தரமான சேவை வழங்குதல் ஆகியவை வாடிக்கையாளர் மகிழ்ச்சியைத் தொடர்ந்து கொண்டு வந்துள்ளன. எங்களின் சி ஏ எஸ் ஏ டெபாசிட்கள் 6% கியூஓகியூ அதிகரித்து ரூ. 8,832 கோடியாக தொடர்ந்து முன்னேற்றம் அடைந்து, மொத்த வைப்புத்தொகைக்கு ~26% பங்களிக்கிறது. ஹலோ உஜ்ஜீவன் போன்ற எங்கள் சேவை சேனல்கள், எங்கள் வீட்டு உபயோகப் பயன்பாடானது, தனிநபர் கடன்கள் பிரிவிற்கான, மீண்டும் மீண்டும், முன்-அங்கீகரிக்கப்பட்ட மற்றும் டாப்-அப் கடன்களின் சுய-ஆன்போர்டிங் செயல்முறைகளுடன் இயக்கப்பட்டுள்ளது. கூடுதலாக, வரி செலுத்தும் வசதியை வழங்குவதன் மூலம் எங்கள் வணிக நிகர வங்கியை நாங்கள் தொடர்ந்து மேம்படுத்தி மேம்படுத்துகிறோம். ஏ டி-1 உரிமத்தையும் நாங்கள் பெற்றுள்ளோம், இது எங்களின் எம் எஸ் எம் ஈ மற்றும் சில்லறை வாடிக்கையாளர்களுக்கு சலுகைகளை அதிகரிக்கும் அந்நிய செலாவணி சேவைகளை வழங்க உதவுகிறது. இது வரவிருக்கும் காலாண்டுகளில் நமது பிற வருமானத்திற்கும் பயனளிக்கும். சேகரிப்புகள் சிறிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன, முதன்மையாக குழுக் கடன் பிரிவில் செப்டம்பர் 24 இல் 97% மற்றும் ஜூன் 24 இல் 98%. இது செப்'24 இல் 2.5% மற்றும் ஜூன்'24 இல் 2.3% ஆக ஒட்டுமொத்த ஜிஎன்பிஏவில் தோன்றும் அழுத்தத்திலும் பிரதிபலிக்கிறது. எம் எஃப் ஐ என் வழிகாட்டுதல்களுடன் ஒப்பிடும்போது கடுமையான விதிமுறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் எங்களின் எச்சரிக்கையான அணுகுமுறை தரமான கையகப்படுத்துதலை உறுதி செய்யும்.

காலாண்டில் 9.2% உள்ள என் ஐ எம் ஆனது 7.5% நிலையான நிதிகளின் விலையால் ஆதரிக்கப்பட்டது. காலாண்டில் பி பி ஓ பிரூ. 461 கோடியாகவும், காலாண்டில் பி ஏ டி ரூ. 233 கோடியாகவும் இருந்தது. எங்களின் மைக்ரோ ஃபைனான்ஸ் பிசினஸ் புத்தகத்தில் ஏற்பட்ட தாக்கம் மற்றும் கடன் செலவு அதிகரிப்பு காரணமாக முந்தைய காலாண்டுகளுடன் ஒப்பிடும் போது இது மிகவும் மெதுவான வளர்ச்சியால் பாதிக்கப்பட்டது. எங்களின் போர்ட்ஃபோலியோவைப் பல்வகைப்படுத்துதல், பாதுகாப்பான சொத்து இலாகாவை அதிகரிப்பது, எங்களின் பலத்தை மேம்படுத்துதல் மற்றும் வெகுஜன மக்களால் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வங்கியாக நம்மைக் காட்டிக் கொண்டு 'எதிர்கால வங்கியை' உருவாக்க நாங்கள் முன்னேறும்போது, எங்கள் வணிகத்தின் மீது எங்களுக்கு நம்பிக்கை உள்ளது.

## டாடா மோட்டார்ஸ் வர்த்தக வாகன வாடிக்கையாளர்களுக்காக ‘வாடிக்கையாளர் பராமரிப்பு மகோத்சவம்‘ என்ற நாடுதழுவிய ஈடுபடுத்தல் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது

திருச்சி, 27 அக் 2024: இந்தியாவின் மிகப்பெரும் வர்த்தக வாகன உற்பத்தியாளரான டாடா மோட்டார்ஸ் ஆனது 24 டிசம்பர் 2024 வரை வர்த்தக வாடிக்கையாளர்களுக்கான அனைத்தையும் உள்ளடக்கிய ஈடுபடுத்தல் திட்டமான வாடிக்கையாளர் பராமரிப்பு மகோத்சவம் 2024-ஐ அறிமுகப்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. இந்த தனித்துவமான மற்றும் விழுமியம்-கூட்டும் திட்டம், நாடுமுழுவதுமுள்ள 2500 அங்கீகரிக்கப்பட்ட சேவை மையங்களில் நடத்தப்படும் மற்றும் சரக்கு வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுனர்களுக்கு ஒருசேர நுண்ணறிவு சார்ந்த உரையாடல்களின் பொருட்டு அவர்கள் சங்கமிக்கும் வாய்ப்பை நல்கும். இந்த மகோத்சவம் மூலம் வாடிக்கையாளர்கள் பயிற்சி பெற்ற டெக்னிஷியன்களால் மேற்கொள்ளப்படும் முழுமையான வாகன பரிசோதனைகள் மற்றும் விழுமியம்-கூட்டப்பட்ட சேவைகளுக்கான அணுகல் உள்ளிட்ட பன்முகப்பட்ட நன்மைகளின் விரவலை பெற்று பயனடையலாம். கூடுதலாக நிறுவனத்தின் சம்பூர்ண சேவா 2.0 முன்முயற்சியின் கீழ் ஓட்டுனர்கள் தனிப்பயனாக்கப்பட்ட நன்மைகளுடன் பாதுகாப்பான மற்றும் எரிபொருள் திறன்சார்ந்த ஓட்டும் வழிமுறைகள் ஆகியவற்றை பற்றிய பரந்த பயிற்சியையும் பெறுவார்கள். வாடிக்கையாளர் பராமரிப்பு மகோத்சவம் 2024 பதிப்பை டாடா மோட்டார்சின் செயல்பாட்டு அதிகாரி திரு கிரிஷ் வாக் அறிமுகப்படுத்தி கூறுகையில், "23 அக்டோபர் ஆண்டு தொடங்கவிருக்கும் வாடிக்கையாளர் பராமரிப்பு மகோத்சவத்தை இந்த ஆண்டு மீண்டும் வழங்குவதை பற்றி நாங்கள் பேருவகை கொண்டுள்ளோம். இன்றைய தினம் எங்களுக்கு விசேஷமான முக்கியத்துவத்தை கொண்டுள்ளது ஏனெனில் இதே தினத்தில்தான் நாங்கள் 1954-ல் எங்களது முதல் வர்த்தக வாகனத்தை விற்பனை செய்தோம் மற்றும் இந்த தினத்தையேதான் நாங்கள் வாடிக்கையாளர் பராமரிப்பு தினமாக அனுஷ்டிக்கிறோம். இந்த மகோத்சவம் ஆனது கவனமான வாகன பரிசோதனைகள் மற்றும் பன்முகப்பட்ட நன்மைகள் ஆகியவற்றின் மூலம் பெஸ்ட்-இன்-கிளாஸ் சேவையை நாங்கள் வழங்குவது தொடர்பான எங்களின் அர்பணிப்பை பிரதிபலிக்கிறது. இந்த மகோத்சவம் மூலம் நாடுமுழுதுமுள்ள ஒவ்வொரு டச்பாயின்டிலுமுள்ள ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் குதூகலத்தை தருவதை உறுதிபடுத்துவதன் மூலம் எங்களது அனைத்து பங்காளர்களுடனுமான எங்கள் உறவை உறுதிபடுத்த இலக்கு கொண்டுள்ளோம். அனைத்து வாடிக்கையாளர்களையும் அவர்களுக்கு அருகிலுள்ள டாடா அங்கீகரிக்கப்பட்ட சேவை மையத்திற்கு வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் மற்றும் இந்த முன்முயற்சியானது அவர்களின் வர்த்தகங்களுக்கு குறிப்பிடத்தக்க விழுமியத்தை சேர்க்கும் என்று நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம்," என்று விளக்கினார்.




டாடா மோட்டார்சின் மிக அகண்ட வர்த்தக வாகனங்களின் தொகுப்பிற்கு நிறுவனத்தின் சம்பூர்ண சேவா 2.0 முன்முயற்சியின் மூலம் கிடைக்கப்பெறும் முழுமையான வாகன வாழ்க்கைசுழற்சி நிர்வாகத்துக்கான விழுமியம்-கூட்டப்பட்ட சேவைகள் மூலம் வலுசேர்க்கப்படுகின்றன. இந்த அனைத்தையும் உள்ளடக்கும் தீர்வானது வாகனம் வாங்கப்படுவதிலிருந்து தொடங்குகிறது மற்றும் வாகனத்தின் வாழ்க்கைசுழற்சி முழுதுமுள்ள ஒவ்வொரு செயல்பாட்டு அம்சத்தையும் ஆதரிக்கிறது, அதாவது பிரேக்டவுன் உதவி, உத்தரவாதமளிக்கப்பட்ட பணி பூர்த்தி அவகாசங்கள், வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தங்கள் (ஏ எம் சி) மற்றும் நியாயமான உதிரி பாகங்களுக்கான வசதிமிக்க அணுகல் ஆகியன உள்ளிட்ட செயல்பாட்டு அம்சங்கள். கூடுதலாக டாடா மோட்டார்ஸ் ஆனது சிறப்பான சரக்கு போக்குவரத்து நிர்வாகத்திற்கான வலைத்தொடர் வாகன தளமான ஃப்ளீட் எட்ஜ்-ஐ திறம்பட பயன்படுத்துகிறது மற்றும் இது உரிமையாளர்கள் தங்கள் வாகனங்களின் தயார்நிலையை அதிகபட்சமாக்கவும் உரிமையாக்கிகொள்ளலின் மொத்த விலையை குறைக்கவும் உதவுகிறது.